# 6

# கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம்

சுவிசேஷ விவரங்களின் தொடக்க கால வாசகர்கள், இயேசு வந்த வேளையில் இருந்த உலகம் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள், ஆனால் நம்மில் பெரும்பான்மையானோர் அவ்வாறு இருப்பதில்லை. கிறிஸ்துவின் நாட்களில் இருந்த பலஸ்தீன நாட்டைப் பற்றி, பி.எஸ். டீன் அவர்கள், “அதன் இயற்கைக் காட்சியானது, சீகேமுக்கு அண்மையில் ஆபிரகாம் தமது கூடாரத்தை ஊன்றியபோது இருந்தது போலவே [இயேசு வந்த நாட்களிலும்] இருந்தது, ஆனால் மற்ற யாவும் மாறியிருந்தன'' என்று கவனித்து இருந்தார். பழைய ஏற்பாட்டு காலங்களில் இருந்து மாற்றம் அடைந்திருந்தவைகளில் பின்வருபவையும் உள்ளடங்குகின்றன: ஜெப ஆலயமானது மதரீதியான காட்சியில் ஒரு திறவுகோல் அம்சமாகியிருந்தது. பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் என்ற பிரிவினர் மாபெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். நாடு ரோமபுரியார்களால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டன?

## உடன்படிக்கைளுக்கு இடைப்பட்ட காலவேளை

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில்தான் பெரும்பாலான மாற்றங்கள் நடைபெற்றன.

பழைய ஏற்பாடு முடிவுற்றபோது, பல யூதர்கள் சமீபத்தில்தான் தாங்கள் இருந்த பாபிலோனின் அடிமைத்தனத்திலும் மற்றும் பெர்சிய அரசாட்சியிலும் இருந்து கானானுக்குத்[1] திரும்பியிருந்தார்கள். நெகேமியாவின் புத்தகம்தான் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்ட கடைசி வரலாற்றுப் புத்தகமாக இருந்தது; மல்கியாதான் பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசன புத்தகமாக இருந்தது. யூதர்கள் தேவனுடைய மேசியாவுக்காகவும் அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணும் செய்தியாளருக்காகவும் காத்திருந்தார்கள். மல்கியா பின்வருமாறு எழுதியிருந்தார்:

> ‘‘இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன்; அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்;

*இதோ, வருகிறார்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 3:1; மேலும் 4:5, 6ஐயும் காணவும்).*

***அமைதி***

*மல்கியாவுக்கும், சுவிசேஷ விவரங்களின் நிகழ்ச்சிகளுக்கும் இடையில், சுமார் நானூறு ஆண்டுகள்[2] அமைதி நிலவிற்று. "அமைதி" என்பதன் மூலம் நான், தீர்க்கதரிசன அமைதியை அர்த்தப்படுத்துகிறேன். அந்த வேளையின் போது, தேவன் விசேஷித்த ஏவுதல் பெற்ற செய்தியாளர்களை அனுப்பா திருந்தார். இஸ்ரவேலர்கள் எழுதப்பட்ட பிரமாணம் மற்றும் தீர்க்க தரிசனங்கள் மூலமாக வழிநடத்தப்பட்டார்கள் (மத். 11:13; லூக். 16:16; லூக். 24:44ஐயும் காணவும்).*

*தேவன் தமது குமாரனை [இந்த உலகிற்கு] அனுப்பும் முன்பு சில நூற்றாண்டுகள் இடைவெளியை ஏன் அனுமதித்தார்?* F. *லாகார்டு ஸ்மித் அவர்கள் ஒரு சில சாத்தியக்கூறுகளைக் கருத்தாகத் தெரிவித்தார்.[3] (1) ஒருவேளை, தேவன் மனிதகுல வரலாற்றின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை நாடகப்படுத்த விரும்பியிருக்கலாம். கடைசியில் இயேசு வந்த வேளையில் முன் எதிர்பார்த்தல் என்பது மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. (2) ஒருவேளை தேவன் மேசியாத்துவ தீர்க்கதரிசனங் களின் நிறைவேற்றத்தை மிகவும் மனதில் பதியும் வகையில் ஏற்படுத்த விரும்பியிருக்கலாம். நீண்ட இடைவேளை என்பது நிறைவேற்றம் முயன்று கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்ததில்லை என்பதை உறுதிப்படுத்தியிருக் கும். (3) ஒருவேளை தேவன், மத மற்றும் அரசியல் சூழ்நிலைகள் மேசியாத்துவ ஊழியத்திற்கு மிகச் சரியானதாகும் வரையிலும் காத்து இருந்திருப்பார். பவுல், "காலம் நிறைவேறினபோது ... தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா. 4:5).* The New Living Translation *என்ற வேதாகம மொழிபெயர்ப்பு நூலில், "ஆனால் சரியான வேளை வந்தபோது, தேவன் தமது குமாரனை அனுப்பினார்" என்றுள்ளது.*

***ஆதாரமூலங்கள்***

*உடன்படிக்கைகளுக்கு இடையில் இருந்த காலமானது தீர்க்கதரிசனத் தின் அமைதிக் காலமாயிருந்தது என்ற உண்மையானது, இயேசு வாழ்ந்த காலத்தில் இருந்த உலகத்தை உருவமைத்த ஆண்டுகளைப் பற்றி நாம் எதுவும் அறிவதில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை. நமக்கு அநேக ஆதாரமூலங்கள் உண்டு.*

*(1) தள்ளுபடியாகம எழுத்தாக்கங்கள். "தள்ளுபடியாகமம்"* [apocrypha] *என்பது சில வேதாகமங்களில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையில் அடங்கியுள்ள பதினான்கு புத்தகங்களுக்குத் தரப்பட்டுள்ள பெயராக உள்ளது.* "Apocrypha" *என்றால் "மறைக்கப்பட்ட" என்று அர்த்தப்படுகிறது. இந்தப் புத்தகங்கள் ஏவுதல் பெற்றவைகளென்று யூதர்களால் கருதப்படவில்லை,[4] இவைகள் ஏவுதல் பெற்றவைகளென்று இயேசுவாலும் அவரது அப்போஸ்தலர்களாலும் கூட கருதப்படவில்லை.[5] இந்தத் தொகுதிகளில் பல, பெர்சிய மற்றும் பிற புறதெய்வ வணக்கக்கார*

மக்களின் மூட நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கின்றன. இருந்தபோதிலும், இந்தப் புத்தகங்கள் முழுமையான அளவில், யூதர்களின் வரலாறு மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய சில உட்கண்ணோட்டத்தைத் தருகின்றன. ஒன்று மக்காபேயர் என்ற புத்தகம் சிறப்பான வகையில் உதவி நிறைந்ததாக உள்ளது; இது கி.மு. 175 மற்றும் 132ம் ஆண்டுகளுக்கு இடையில் யூதேயாவில் இருந்த யூதமக்களின் வரலாற்றை அடக்கியுள்ளது.

(2) யோசிப்பஸின் எழுத்துக்கள். யோசிப்பஸ் என்பவர் கி.மு. 37ல் பிறந்த ஒரு யூத வரலாற்றாளராக இருந்தார். இவர் தீத்துவால் எருசலேம் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டபோது உயிர்பிழைத்தவராகவும் இரு முக்கியமான புத்தகங்களை எழுதியவராகவும் இருந்தார்: The Antiquities of the Jews (படைப்பு முதல் அவரது மக்களின் வரலாற்று விவரம்) மற்றும் The Jewish Wars (கி.மு. 170 முதல் இவரது காலம் வரையில் யூதர்களின் வரலாற்று விவரம்)[6] யோசிப்பஸின் சில "உண்மைகள்" கேள்விக்குட்பட்டு இருக்கின்றன, ஆனால் அவரது எழுத்தாக்கங்கள் தகவலின் பிரதான ஆதாரமூலங்களாக நிலைத்துள்ளன.

(3) கிரேக்க மற்றும் ரோம உபரி சாட்சியங்கள். இந்தப் பாடத் தொடரில் இந்த ஆதாரமூலங்கள் பற்றிய சில குறிப்பிடுதல்கள் ஏற்படுத்தப் படும்.

(4) புதைபொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள். பலஸ்தீனத்திலும் மற்ற சில இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட சில விவரங்கள் சில வேளைகளில் யூதர்களின் வரலாறு மற்றும் வாழ்வுப் பாணி ஆகியவற்றின் மீது வெளிச்சத்தை வீசுகின்றன.

(5) வேத வசனங்கள். இந்தக் காலவேளை பற்றிய சில தகவல்கள் சுவிசேஷ விவரங்களில் இருந்தே எடுக்கப்படக் கூடியவைகளாக உள்ளன.

## நான்கு பேரரசுகள்

உடன்படிக்கைகளுக்கு நடுவில் இருந்த நானூறு அல்லது அதற்குச் சற்றே மேற்பட்ட ஆண்டுகளில், தேவன் மனிதர்களின் விஷயங்களில் அசைவாடிக் கொண்டு, தமது நோக்கங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருந்தார். அந்த ஆண்டுகளின் அரசியல் ரீதியான சட்டக அமைப்பானது தானியேல் 2ம் அதிகாரத்தில், பாபிலோன் அரசரான நேபுகாத்நேச்சாரின் கனவு ஒன்றில் வரைக்குறிப்பிடப்பட்டது:

> ... ஒரு பெரிய சிலை ... அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது ... அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதன் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது (தானி. 2:31-33).

நேபுகாத்நேச்சாரும் (மற்றும் பாபிலோனிய ராஜ்யமும்) பொன்னால் ஆன தலையாகக் குறிக்கப்பட்டதாக தானியேல் கூறினார் (வ. 37, 38). பின்பு

*அந்த தீர்க்கதரிசி பின்வருமாறு கூறினார்:*

> *உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும். நாலாவது ராஜ்யம் இரும்பைப் போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப் போடுகிற இரும்பைபோல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப் போடும் (வ. 39, 40).*

*தானியேல் 2ன் நான்கு ராஜ்யங்கள், (1) பாபிலோனிய பேரரசு, (2) மேதிய பெர்சிய பேரரசு, (3) கிரேக்கப் பேரரசு, மற்றும் (4) ரோமப் பேரரசு என்பவைகளாக இருந்தன என்று நாம் வேத வசனங்களில் இருந்தும் வரலாற்றில் இருந்தும் அறிகின்றோம்.*[7]

*பழைய ஏற்பாடு நிறைவடைவதற்கு முன்பு, இவற்றில் முதல் பேரரசானது (பாபிலோன்) வீழ்ந்து போயிருந்தது, இரண்டாவது பேரரசானது (மேதிய பெர்சியா) அதிகாரத்திற்கு வந்திருந்தது (தானி. 5:28, 30, 31; 6:8, 12, 15, 28; 8:20; 10:1; 11:1; எஸ்றா 1:1-4; எஸ்தர் 1:19 இவற்றைக் காணவும்). இதன் பின்பு, இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ராஜ்யங்களின்போது நடந்த நிகழ்ச்சிகளின் மீது நமது கவனம் செல்லுகிறது.*

### *மேதிய பெர்சிய காலம்*[8] *(கி.மு. 539-333*[9]*)*

*ஏற்கனவே கவனித்தபடி, பழைய ஏற்பாடு முடிவுக்கு வந்தபோது, பெர்சியர்கள் கானானைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்திருந்தார்கள். இது யூதர்களுக்கு அடிப்படையில் ஒரு சகிப்புத் தன்மையின் காலமாக இருந்தது. யூதர்கள் - அண்டையில் இருந்த பெர்சிய ஆளுநருக்குக் கீழ்ப்பட்ட நிலையில் இருந்த - பிரதான ஆசாரியரால் ஆளப்படுவதை பெர்சியர்கள் அனுமதித்தார்கள்.*

*இந்தக் காலகட்டத்தின்போது, திரும்பி வந்த யூதர்களுக்கும் கானான் நாட்டில் இருந்த கலப்பினக் குடிகளுக்கும் இடையில் இறுக்கம் வளர்ந்தது (எஸ்றா 4:4; நெகே. 4:1-8ஐக் காணவும்). இந்தக் குடிகள் யூதேயாவின் வடக்குப் பகுதியில் இருந்த சமாரியா என்று அறியப்பட்ட பகுதியில் ஏராளமாகக் குடியிருந்தார்கள் (எஸ்றா 4:10, 17; நெகே. 4:2ஐக் காணவும்); இவர்கள் "சமாரியர்கள்" என்று அறியப்பட்டார்கள். இரண்டு இராஜாக் கள் 17:24-33 வசனப்பகுதியானது, சமாரியர்கள் யெகோவாவுக்கான ஆராதனையில் புறதெய்வங்களின் ஆராதனையைக் கலந்திருந்தது எப்படி என்று கூறுகிறது. வசனம் 33 "[அவர்கள்] கர்த்தருக்குப் பயந்தும், ... தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள்." இயேசு வந்தபோது, சமாரியர்கள் நாட்டின் மையப்பகுதியில் குடியிருந்தார்கள் (யோவா. 4:3, 4). யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் நிலவிய தோழமையற்ற உறவுமுறையானது இயேசுவின் வாழ்வில் ஒரு சில நிழ்ச்சிகளுக்குப் பின்னணியை அளித்தது (லூக். 10:33; 17:16; யோவா. 4:9).*

**கிரேக்கர்களின் காலம்[10] (கி.மு. 333-165)**

*(1) மகா அலெக்சாந்தர் (கி.மு. 333-323).* கி.மு. 336ல், இருபது வயதுடைய மகா அலெக்சாந்தர் என்பவர் கிரேக்கப் படையை வழிநடத்தும் தளபதிப் பொறுப்பேற்றுக்கொண்டார். ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே, அவர் இந்த உலகத்தையே வெற்றிகொண்டார். இவரது படையெடுப்பு களின்போது, எசேக்கியல் 26 மற்றும் 28ம் அதிகாரங்களில் தீருநகருக் கெதிராக உரைக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக இவர் அந்த நகரத்தைத் தீக்கிரையாக்கினார். இவரது செல்வாக்கின் காரணமாக, கிரேக்கக் கலாச்சாரம் உலகெங்கிலும் பரவிற்று. இவர் நைல் நதியின் கரையில் கிரேக்கச் செல்வாக்கின் மையமாக விளங்குவதற்காக அலெக்சந் திரியா என்ற பட்டணத்தைக் கட்டினார். கிரேக்க மொழியானது உலகளாவிய மொழியானதென்பது கிறிஸ்தவர்களுக்கு விசேஷமாகக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது. புதிய ஏற்பாடு கொய்னீ (பொதுவான) கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது.[11]

கி.மு. 333ல் அலெக்சாந்தர் எருசலேமைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தார். நகரத்தின் மதில்களுக்கு வெளியில் பிரதான ஆசாரியர் இந்த வெற்றியாளரை எவ்வாறு வரவேற்றார் என்பது பற்றி யோசிப்பஸின் எழுத்துக்கள் கூறுகின்றன. அலெக்சாந்தர் யூதர்களுக்கு விசேஷித்த சலுகைகளைக் கொடுத்தார். அவர்களை இவர் காலனிக் குடிகளாகப் பயன்படுத்தி, தமது பேரரசின் தொலைதூர இடங்களில் குடியமரும்படி இணங்கச் செய்தார்.

இந்தக் காலகட்டத்தின்போது, வேதபாரகர்கள் தங்களை யூதர்களின் மத்தியில் தனிப்பட்ட வகுப்பினராக தோற்றமளிக்கச் செய்தார்கள். பிற்பாடு நாம் வேதபாரகர்களைப் பற்றி அதிகமாய்க் கூறுவோம்.

கி.மு. 323ல் அலெக்சாந்தரின் மரணத்தைத் தொடர்ந்து இருபது ஆண்டுகளாக அதிகாரப் போராட்டம் நடைபெற்றது. கடைசியில் இவரது பேரரசானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது: கிரேக்கம், ஆசியா, எகிப்து மற்றும் சீரியா.[12] இவற்றில் எகிப்தும் சீரியாவும் நமது ஆர்வத்திற்குரிய பகுதிகளாகும். எகிப்து நாட்டை தாலமிகள்[13] தங்கள் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தார்கள், சீரியாவை செலூக்கியர்கள்[14] ஆண்டார்கள்.

*(2) தாலமிகள் (கி.மு. 323-198).* எகிப்துக்கும் சீரியாவுக்கும் இடையில் இருந்த பலஸ்தீன நாடு, இவ்விரண்டு வல்லரசுகளுக்கும் இடையில் நடந்த போராட்டத்தில் சிக்கிக் கொண்டது.[15] எகிப்தியப் படைகள் சீரியாவை நோக்கி அணிவகுத்துச் செல்லுகையில், அவர்கள் வடக்கு நோக்கிச் செல்லும் தங்கள் வழியில் பலஸ்தீனத்தைப் பிடித்துக் கொள்ளு வார்கள். சீரிய நாட்டினர் எகிப்தை நோக்கித் தெற்கு முகமாய்ச் செல்லுகை யில், அவர்கள் போகும்போதோ அல்லது திரும்பி வரும்போதோ பலஸ்தீனத்தைப் பிடிக்க முயற்சி செய்வார்கள்.

அடுத்த நூறு ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில், யூதர்கள் அவ்வப்போது சீரியாவின் கட்டுப்பாட்டின் கீழிருந்தார்கள், ஆனால் பெரும் பாலான வேளைகளில் அவர்கள் எகிப்துக்குக் கீழ்ப்பட்டு இருந்தார்கள். முதலாம் தாலமி எருசலேமைக் கைப்பற்றி, அலெக்சாந்திரியாவின் காலனி

*யமைப்புக்கு உதவுவதற்காக பல யூதர்களை எடுத்துச் சென்றார். அவர்களுக்கு இவர் முழுக்குடியுரிமை அளித்து யூதக் கல்விப் புலமையை ஊக்கப்படுத்தினார்.*

*தாலமிகளின் ஆட்சிக் காலமானது யூதமக்களுக்கு அடிப்படையாக ஒரு சமாதானம் நிறைந்த காலமாக இருந்தது. எகிப்தில் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்றது ஒரு தனிச்சிறந்த சாதனையாக இருந்தது. இரண்டாம் தாலமி, அலெக்சாந்திரியாவில் இருந்த மாபெரும் நூலகத்திற்காக எபிரெய வேத வசனங்களை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும்படி கட்டளையிட்டார். இந்த மொழிபெயர்ப்புப் பணியானது கி.மு. 285 வாக்கில் செய்து முடிக்கப்பட்டது. பாரம்பரியத்தின் படி, இது யூதக் கல்வியாளர்கள் எழுபது பேர்களால் உண்டாக்கப்பட்டது. (ஆகவேதான் "எழுபதின்மர்" என்று அர்த்தப்படும் "செப்துவஜிந்த்" என்ற பெயர் ஏற்பட்டது.) புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் மற்றும் உரையாளர்கள் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டின் பல மேற்கோள்கள் செப்துவஜிந்த்தில் இருந்தே எடுத்தாளப் பட்டன.*

*இந்தக் காலகட்டம் முழுவதிலும் எகிப்துக்கும் சீரியாவுக்கும் இடையில் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. கடைசியில், கி.மு. 198வாக்கில், பலஸ்தீனமானது சீரியாவின் ஆளுகையின் கீழ் வந்தது.*

*(3) செலூரக்கியர்கள் (கி.மு. 198-165). செலூரக்கியர்கள் பலஸ்தீனத்தில் தங்கள் ஆளுகையை இலகுவாக்குவதற்காக, அதை ஐந்து மாநிலங்களாகப் பிரித்தார்கள்: யூதேயா, சமாரியா, கலிலேயா, பெரேயா, மற்றும் திராகொனித்தி (யோர்தானுக்குக் கிழக்கே இருந்த பகுதி; தற்போது இது 'லேஜா' எனப்படுகிறது). இவற்றைப் பற்றியும் பிற பிரிவுகளைப் பற்றியும் நாம் பிற்பாடு அதிகம் கூறுவோம்.*

*சீரியாவின் [ஆளுகைக்] காலமானது யூதத்துவ வரலாற்றில் மிகவும் இருண்ட காலமாக இருந்தது. நான்காம் அந்தியோகஸ் என்பவன் பிரதான வில்லனாக இருந்தான், இவன் அந்தியோகஸ் எபிபெனஸ் என்றும் அழைக்கப்பட்டான். லாகார்டு ஸ்மித் அவர்கள், இவனை "பொதுப் பணியை ஏற்றிருந்தவர்களிலேயே மிகவும் கொடூரமான மனிதன்" என்று பெயரிட்டார்.[16] எபிபெனஸ் (கி.மு. 175-165) யூத மக்களை வெறுத்து, அவர்களைக் கிரேக்கர்களாக்க முயற்சி செய்தான். அவன் எருசலேமில் யூப்பித்தருக்கு ஒரு கோவிலை எழுப்பி, யூதமார்க்கத்தை மிதித்து நசுக்க முயற்சி செய்தான். தேவாலயத்தை மூடச்செய்து, விருத்தசேதனத்தை சட்ட விரோதமான செயல் என்று அறிவித்து, யூதத்துவத்தைச் செயல்படுத்தும் எவருக்கும் மரணத்தை வாக்களித்தான். இவன் ஆயிரக்கணக்கான யூதர்களை அடிமைகளாக விற்று இன்னும் ஆயிரக்கணக்கானவர்களைக் கொல்லுவித்தான். இவன் தேவாலயத்தின் பொக்கிஷங்களைக் கவர்ந்து கொண்டு, அங்கிருந்த பலிபீடத்தில் ஒரு பன்றியைப் பலிசெலுத்தினான்.[17] அந்தச் சாம்பலைத் தண்ணீரில் இட்டு, அந்தப் "பன்றித் தண்ணீரை" தேவாலயம் எங்கும் தெளிக்கச் செய்து, பரிசுத்த இடத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினான்.*

**சுயாதீனத்தின் காலவேளை (கி.மு. 165-63)**

அந்தியோகஸ் எபிபெனஸின் அக்கிரமச் செயல்கள் மத்தத்தியா என்ற பெயர்கொண்ட வயது முதிர்ந்த ஆசாரியரால் வழிநடத்தப்பட்ட ஒரு யூதத்துவக் கலகத்திற்குக் கிரியாஊக்கியை அளித்தது. மத்தத்தியாஸுக்கு தைரியமும் யுத்த எண்ணமும் கொண்ட ஐந்து மகன்கள் இருந்தார்கள், அவர்களில் ஒருவரான - யூதா என்பவர் - அந்தக் கலகத்திற்குத் தலைவரானார். இந்த யூதா "சம்மட்டி யூதா" என்று அறியப்பட்டார். "மக்காபே" என்பது "சம்மட்டி" என்பதற்கான கிரேக்க வார்த்தையாகும், எனவே இது யூத வரலாற்றின் மக்காபேயரது காலம் என்று சில வேளைகளில் அழைக்கப்படுகிறது.[18] யூதா மக்காபேயு கி.மு. 165ல் எருசலேமை மீண்டும் கைப்பற்றினார். தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டு யெகோவாவுக்கு மீண்டும் அர்ப்பணிக்கப்பட்டது. இதுதான் பிரதிஷ்டைப் பண்டிகைக்குத் தொடக்கமானது (யோவா. 10:22ஐக் காணவும்).

சீரியாவுடனான யுத்தம் கி.மு. 163 முதல் 143 வரை தொடர்ந்தது. கடைசியில், யூதர்கள் தங்களது விடுதலையை வெற்றியாகப் பெற்றார்கள். கி.மு. 135ல் யோவான் ஹிர்க்கேனஸ் என்பவரின் கீழ் ஒரு யூத அரசவம்சம் நிலைநாட்டப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், பரிசேயர்கள், சதுசேயர்கள் உள்ளிட்ட யூதப்பிரிவுகள் எழும்பின. இந்த மற்றும் பிற பிரிவுகளைப் பற்றி அதிகமானவற்றை நாம் பின்பு கூறுவோம். மேலும், இந்தக் காலகட்டத்தில் பிரதான ஆசாரியரின் பணிப்பொறுப்பானது மதரீதியானதற்கும் மேலாக அரசியல் ரீதியானதாயிற்று. அதிகாரத்தில் இருந்தவர்களினால் பிரதான ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.[19]

இந்தக் காலகட்டத்தின் முடிவு ஆண்டுகள் உள்நாட்டுக் கலகத்தின் ஆண்டுகளாயிருந்தன. யோவான் ஹிர்க்கேனஸின் சந்ததியார்களில் பல்வேறு உறுப்பினர்கள் அரியணைக்குப் போட்டியாளர்கள் ஆயினர். சூழ்ச்சிகளும், எதிர்ச் சூழ்ச்சிகளும், அரசியல் கொலைகளும் நடந்தன. கடைசியில், வழக்காடிக் கொண்டிருந்தவர்களில் ஒரு சாரார் ஆதரவுக்காக, எழும்பிக் கொண்டிருந்த - ரோமாபுரி என்ற - அதிகார வர்க்கத்தினரிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த யூதத்துவ வழக்கில் ரோமாபுரியின் ஈடுபாட்டை நாடுதல் என்பது, கோழிகள் தங்களுக்குள் உள்ள வேறுபாடான கருத்துக்களைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு நரியை, கோழிப் பண்ணைக்குள் அழைப்பது போலிருந்தது. விரைவிலேயே யூதர்கள் தங்கள் சுயாதீன நிலையை இழந்துபோனார்கள்.

**ரோமாபுரியாரின் காலம் (கி.மு. 63 - கி.பி. 70[20])**

கி.மு. 63ல் மகா பாம்ப்பே என்பவனால் எருசலேம் பிடிக்கப்பட்டது.[21] இயேசுவின் [பூமிக்குரிய] வாழ்வுக் காலத்தில், அகுஸ்து இராயன் (ஆக்டேவியஸ்) (கி.மு. 27 - கி.பி. 14) (லூக்கா 2:1) மற்றும் திபேரியு இராயன் (கி.பி. 14-37) (லூக்கா 3:1) ஆகியோர் ரோம அரசர்களாய் இருந்தார்கள்.

பலஸ்தீனமானது ரோமாபுரிக்குப் பொறுப்பு ஒப்புவிக்க வேண்டிய ஆளுநர்களின் கீழ் வைக்கப்பட்டது. தொடக்கத்தில், அந்திப்பத்தர் என்பவன்

*யூதேயாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டான். அவனைத் தொடர்ந்து அவனது மகனான மகா ஏரோது கி.மு. 37-3ல் யூதேயாவின் அரசனாயிருந்தான் (லூக். 1:5). ஏரோது ஆட்சி செய்வதில் மேதையாய் இருந்தான், ஆனால் அவனது குற்றங்கள் அவனது ஆட்சித் திறமைகளை விட அதிகமாயிருந்தன. அவன் எருசலேமில் இரதம் ஓட்டப் பந்தயங்கள் மற்றும் பிற கிரேக்கப் பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் யூதர்களின் வெறுப்பைத் தூண்டி விட்டான். அவர்களின் ஆதரவை மீண்டும் ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக அவன், எபிபெனஸினால் அழிக்கப் பட்டிருந்த தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்கினான் (யோவா. 2:20ஐக் காணவும்). இந்த ஏரோது, இயேசுவை அழிக்கும் முயற்சியில் சிறுபிள்ளைகளைக் கொன்ற புகழற்ற அரசனாக இருந்தான் (மத். 2:1-18).*

*மகா ஏரோது இறந்தபோது (மத். 2:19), நாடானது காற்பங்கு தேசாதிபதிகளின் ("நால்வரின் ஆட்சி") கரங்களில் ஒப்படைக்கப்பட்டது: (1) தொடக்கத்தில், ஏரோதின் மகன்களில் ஒருவனான அர்க்கெலாயு என்பவன் யூதேயா மற்றும் சமாரியா பகுதிகளுக்கு அரசனானான் (மத். 2:22). இவன் கி.மு. 6ல் பதவியிறக்கப்பட்டு, இவனுக்குப் பதிலாக ஆளுநர்கள் வரிசையாக நியமிக்கப்பட்டார்கள். (இவர்களில் பிலாத்து ஆறாவது ஆளுநனாயிருந்தான் [லூக். 3:1].) (2) இன்னொரு மகனான ஏரோது அந்திப்பா என்பவன் (புதிய ஏற்பாட்டில் சிலவேளைகளில் இவன் "ஏரோது" என்று மட்டும், மற்றும் சிலவேளைகளில் "காற்பங்கு தேசாதிபதியான ஏரோது" என்று தனிப்பட்ட வகையிலும் அழைக்கப்படுகின்றான்), கலிலேயா மற்றும் பெரேயா பகுதிகளுக்குக் கால்பங்கு தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான் (லூக். 3:1; மத். 14:1ஐக் காணவும்). இவன் இயேசுவின் சொந்த ஊழியத்தின் போது ஆட்சி செய்ததால் ஏரோதுகளிலேயே நன்கு அறியப்பட்டவனாயிருக்கின்றான். (3) மூன்றாவது மகனான பிலிப்பு, "இத்துரேயாவுக்கும் திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாய்"[22] இருந்தான் (லூக். 3:1; மத். 14:3ஐக் காணவும்) - இந்தப் பகுதி சில வேளைகளில் பாசான் மாவட்டம் என்று அழைக்கப்பட்டது.[23] (4) அபிலேன்[24] என்று அழைக்கப்பட்ட நான்காவது பகுதி லிசானியா என்பவனுக்குக் கொடுக்கப்பட்டது (லூக். 3:1), இவன் ஏரோது [குடும்பத்தைச் சேர்ந்தவன்] அல்ல. அபிலேன் என்பது மகா ஏரோதினால் ஆளப்பட்டிராத பகுதியாயிருந்தது.*

*ரோமர்கள் யூதர்களுக்குப் பல சலுகைகளை வழங்கியிருந்தார்கள்: இவர்கள் இராணுவ சேவையில் இருந்து விலக்குப் பெற்றிருந்தார்கள். இவர்களை ஓய்வு நாளன்று நீதிமன்றத்திற்கு அழைப்பிக்க முடியாது. இவர்கள் உருவம் இன்றி எழுத்துக்கள் மட்டும் பொறிக்கப்பட்ட தாமிர நாணயங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.[25] இவர்களின் நாட்டில் ரோமப்போர் வீரர்கள், உருவங்கள் கொண்ட கொடிகளை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தார்கள்.*

*ரோமர்களின் காலமானது கிறிஸ்துவுக்கு எவ்வாறு வழியை ஆயத்தம் செய்தது என்பது கிறிஸ்தவர்களுக்கு மாபெரும் தனிச்சிறப்புடைய விஷயமாக உள்ளது. இது செய்திருந்த வழியில், Pax Romana (ரோமச் சமாதானம்) என்பதன் நிலைநாட்டுதல், உலகளாவிய (கிரேக்க) மொழியின்*

பரவுதல், மற்றும் பேரரசு அளவிலான போக்குவரத்தையும் தகவல் தொடர்பையும் அனுமதித்த சாலைகளின் பெருவாரியான வலை அமைப்பு ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

## பலஸ்தீன நாடு

பழைய ஏற்பாட்டில், இயேசு பிற்பாடு பிறந்த நாடு, "கானான்" என்று அழைக்கப்பட்டது (ஆதி. 12:5; யாத். 6:4; யோசு. 14:1). புதிய ஏற்பாட்டின் காலத்தில், இது "பலஸ்தீனம்"[26] - புதிய ஏற்பாட்டில் இந்தப் பெயர் காணப்படாவிட்டாலும் பலஸ்தீனம் - என்று அறியப்பட்டது.[27]

இந்தப் பாடத்தொடர், இயேசுவின் இயக்கங்களை நீங்கள் மனக்கண் களினால் காண உதவியாக வரைபடங்களைச் சித்தரிக்கும். சுவிசேஷ விவரங்கள் கிறிஸ்துவின் வாழ்வில் நடைபெற்றவற்றில் சுமார் 150 நிகழ்ச்சி களைப் பதிவு செய்துள்ளன; இவற்றில் நூறு அல்லது அதற்குச் சற்று அதிகமானவை குறிப்பிட்ட புவியியல் அமைவுகளுடன் பிணைக்கப் பட்டுள்ளன.

"கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தை கவனியுங்கள். "தாண் முதல் பெயர்செபா வரையிலும்" (நியா. 20:1; 1 சாமு. 3:20; 1 இரா. 4:25 ஆகியவற்றையும் காணவும்) என்பது இந்த நாட்டின் நீளத்தைக் குறித்துப் பேசுவதற்குப் பிரபலமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வழி முறையாக இருந்தது. வடக்கில் இருந்த தாண் முதல் தெற்கில் இருந்த பெயர்செபா வரையிலும் ஏறக்குறைய 150 மைல்கள் தூரம் இருந்தது. இந்த நாடு ஏறக்குறைய 10,000 முதல் 12,000 சதுர மைல்கள் பரப்பளவு உடையதாயிருந்தது.[28] ஒப்பீட்டளவுப்படி, அமெரிக்காவில் உள்ள ஐம்பதில் நாற்பது மாநிலங்கள் இதை விடப் பெரியவைகளாய் உள்ளன.[29]

கிறிஸ்துவின் வாழ்வில் மூன்று மாநிலங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை யாயிருந்தன, இம்மூன்றுமே யோர்தான் நதியின் மேற்குப் பகுதியில் இருந்தன. (1) *யூதேயா.* யூதேயா மாநிலமானது யூதர்களின் செல்வாக்கு டையதாக இருந்தது. யூதேயா மாநிலத்தவர்கள் தங்கள் பழைமைவாதம் குறித்துப் பெருமை கொண்டிருந்தார்கள். இயேசு யூதேயாவுக்கு அடிக்கடி - விசேஷமாகப் பண்டிகை நாட்களில் - சென்றார். (2) *சமாரியா.* நாம் கண்டுள்ளபடி, சமாரியா என்பது "சமாரியர்கள்" என்று அறியப்பட்டிருந்த யூதரின் அரை இனத்தவர்கள் குடியிருந்த பகுதியாக இருந்தது. இயேசு, வடக்கு அல்லது தெற்கு நோக்கிய தமது பயணங்கள் சிலவற்றில் சமாரியாவின் வழியாகச் சென்றார். (3) *கலிலேயா.* கலிலேயாவில் யூதர் களும் புறஜாதியார்களும் கலந்து வாழ்ந்திருந்தார்கள் (மத். 4:15ஐக் காணவும்). இது யூதேயா மாநிலத்தவர்களினால் ஒரு பிற்பட்ட பகுதியாகக் கண்ணோக்கப்பட்டது. இயேசு தமது வாழ்வில் பெரும்பகுதியைக் கலிலேயாவில்தான் செலவிட்டிருந்தார்.

வரைபடத்தில் உள்ள மற்ற பகுதிகளும் கிறிஸ்துவின் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. பல வேளைகளில், இயேசு கலிலேயாக் கடலைக் கடந்து நமது வரைபடத்தில் "பாசான் மாவட்டம்"

*என்று குறிப்பிடப்பட்ட கீழக்குக்கரைப் பகுதிக்குச் சென்றார்.[30] இதை லூக்கா 3:1 வசனம் "இத்துரேயா மற்றும் திராகொனித்தி நாடு" என்று அழைக்கிறது. இந்தப் பகுதியின் தென்பாகமானது "தெக்கப்போலி" என்று அழைக்கப்பட்டது, இது "பத்து நகரங்கள்"[31] என்று நேரடியாக அர்த்தப் பட்டது (மத். 4:25; மாற். 5:20; 7:31).*

*இயேசுவின் ஊழியம் முடியவிருந்த வேளையில், அவர் கலிலேயாவில் இருந்து பல முறை பின்வாங்கிச் சென்றார். இவற்றில் ஒன்றில், அவர் மேற்கில் பெனிக்கியா நாட்டின் தீரு, சீதோன் நகரங்கள் இருந்த பகுதி வரை சென்றார் (மத். 15:21). மேலும் அவர் யோர்தானுக்குக் கிழக்கில் இருந்த பகுதிகளுக்கும் பலமுறை பின்வாங்கிச் சென்றார். யோசிப்பஸின் கூற்றுப்படி, இந்தப் பகுதி "பெரேயா" என்று குறிப்பிடப்பட்டது, ஆனால் சுவிசேஷ விவரங்களில் "யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதி" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது (மத். 4:25; 19:1; மாற். 10:1; யோவா. 10:40).*

*உங்கள் புவியியல் சார்பறிவுக்கு உதவுவதற்காக ஒரு சில முக்கியமான இடங்கள் இந்த வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு புத்தகத்திலும், அந்தப் புத்தகத்தில் நாம் படிக்கும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய இடங்கள் குறிப்பிடப்பட்ட வரைபடம் ஒன்றை நாம் பெறுவோம்.*

*இந்த வரைபடங்கள் பற்றி ஒரு முன்னெச்சரிக்கை வார்த்தை அவசியமாக உள்ளது: வேதாகம விவரங்கள் மற்றும் உலகப்பிரகாரமான ஆதார மூலங்கள் ஆகியவற்றில் இருந்து நாட்டின் அடிப்படைப் பிரிவு ஏறக்குறைய தெளிவாய் அறியப்படுகையில், மாறுபட்ட மாநிலங்களுக்கு இடையிலான மிகச் சரியான எல்லைகள் தெளிவற்றவைகளாய் உள்ளன. ஆகையால், மாநிலங்களுக்கு இடையிலான எல்லைக்கோடுகள் அந்த எல்லைகளின் தோராயமான அமைவுகளாக உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.*

## *பிற மாற்றங்கள்*

*பழைய ஏற்பாட்டின் முடிவு நாட்களும் உடன்படிக்கைகளுக்கு இடையில் உள்ள ஆண்டுகளும் யூதத்துவ உலகத்தைப் பிற வழிகளிலும் பாதித்தன.*

### *பெயரில் மாற்றங்கள்*

*பழைய ஏற்பாட்டின் முடிவில், தேவனுடைய மக்கள் ஏற்கனவே "யூதர்கள்" என்று அறியப்பட்டு இருந்தார்கள் (எஸ்றா 4:12; 5:1). இந்தப் பெயரானது தெற்கு இராஜ்யமான யூதா என்பதில் இருந்து தரவழைக்கப் பட்டதாக இருந்தது: பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்து திரும்பிய பெரும்பான்மையானவர்கள் அந்தப் பகுதியை(மற்றும் யூதா கோத்தி ரத்தை)ச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டின் காலங்களில், "யூதர்கள்" என்பது இந்த மக்களுக்கான அடிப்படை பெயராயிருந்தது (மத். 2:2; யோவா. 1:19).*

*இன்னும் அவர்கள் அவ்வப்போது “இஸ்ரவேலர்கள்” என்று அழைக்கப் பட்டார்கள் (யோவா. 1:47; 2 கொரி. 11:22 ஆகியவற்றைக் காணவும்), இது அவர்கள் இஸ்ரவேலின் [யாக்கோபுவின்] சந்ததியினராக இருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காண்பித்தது. இவர்களின் பாரம்பரிய மொழியின் காரணமாக, இவர்கள் சில வேளைகளில் “எபிரெயர்கள்” (அப். 6:1; 2 கொரி. 11:22) என்றும் பெயர் குறிப்பிடப்பட்டார்கள்.*

***மொழியில் மாற்றம்***

*பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்து திரும்பிய பின்பு, யூதர்களின் பொதுவான மொழியாக இருந்த எபிரெயம் படிப்படியாக மாறி அதன் இடத்தை அரமாயிக் மொழி பிடித்துக்கொண்டது. இத்தாலிய மொழி லத்தீன் மொழியை ஒத்ததாக இருப்பது போல - அரமாயிக் என்பது - எபிரெய மொழியை ஒத்த சீரியா நாட்டு மொழியாக இருந்தது. [ஆயினும்] இத்தாலியப் பையன்கள் லத்தீனைப் படிப்பது போன்றே - யூதப்பையன்கள் பள்ளிகளில் - எபிரெய மொழியைப் படித்துக் கொண்டிருந்தனர்.*

*இயேசுவின் நாட்களில் கிரேக்க மொழி உலகளாவிய மொழியாயிருக்க, ரோம அரசின் அலுவல் சார்ந்த மொழியாக லத்தீன் மொழி விளங்கிற்று. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் தலைக்கு மேல் இருந்த பெயர் விலாசமானது மூன்று மொழிகளில் இருந்தது: எபிரெயு, லத்தீன் மற்றும் கிரேக்கம் (யோவா. 19:20).*

***தொழிலில் மாற்றும்***

*அடிமைத்தனத்திற்கு முன்பு, யூதர்கள் அடிப்படையில் விவசாயிகளாக வும் மேய்ப்பர்களாகவும் இருந்தார்கள். அடிமைத்தனத்தின்போது, தங்கள் உடைமைகளில் இருந்து பிரிக்கப்பட்ட நிலையில், அவர்கள், தாங்கள் வர்த்தகத் திறமைகளைக் கொண்டிருந்ததைக் கண்டறிந்தார்கள். இயேசுவின் காலத்தின்போது, யூத வர்த்தகர்கள் உலகெங்கும் சிதறியிருந் தார்கள்.*

***ஆராதனையில் மாற்றம்***

*எருசலேமில் இருந்த தேவாலயம் யூதர்களுக்கு இன்னமும் முக்கியத் துவம் வாய்ந்ததாக இருந்தது. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பின்பு செரூபாபேலினால் கட்டப்பட்ட தேவாலயமானது எபிபெனஸினால் பெருமளவுக்கு அழிக்கப்பட்டிருந்தது. இயேசுவின் பிறப்புக்குச் சுமார் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, மகா ஏரோது தேவாலயத்தைத் திரும்பக் கட்டும் பணியைத் தொடங்கியிருந்தார் (யோவா. 2:20ஐக் காணவும்); இயேசுவின் ஊழியத்தின் போது, அந்தப் பணித்திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.[32] பலஸ்தீனத்தில் வாழ்ந்த விசுவாசம் நிறைந்தவர்கள், பண்டிகைகளுக்காக ஆண்டில் பலமுறை எருசலேமுக்குப் பயணம் செய்தார்கள்.[33] மற்ற நாடுகளில் இருந்த யூதர்களும் அவ்வப்போது எருசலேமுக்குக் கடினமான பயணத்தை மேற்கொண்டார்கள் (அப். 2:5-11).*

*ஆயினும் கிறிஸ்துவின் காலத்தின்போது, ஜெப ஆலயமானது*

யூதர்களின் மத்தியில் மதவாழ்வின் இருதயம் போன்ற மையப்பகுதியானது. ஜெப ஆலயம் பற்றிப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடுதல் ஏதும் இல்லை, ஆனால் இது புதிய ஏற்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது (மத். 12:9; 13:54). யூதர்கள் அடிமைத்தனத்தில் இருந்த வேளையில், குறிக்கப் பட்ட பண்டிகை நாட்களில் அவர்களால் எருசலேமுக்குப் போக இயலாத சூழ்நிலையில் ஜெப ஆலயங்கள் உருவாகி இருக்கலாம். ஒரு ஜெப ஆலயத்தை நிர்வகிப்பதற்குப் பத்து யூத ஆண்கள் இருந்தாலே போதுமான தாயிருந்தது.[34] எருசலேமிலும் உலகம் முழுவதிலும் நூற்றுக்கணக்கான ஜெப ஆலயங்கள் இருந்தன. ஜெப ஆலயத்தில் ஓய்வுநாள் ஆராதனை என்பது எளியதாக - பாடல்கள், ஜெபங்கள், மற்றும் வேத வசனங்களிலிருந்து வாசித்து படித்தல் என்ற விஷயங்கள் அடங்கியதாக - இருந்தது.[35] பெரும்பாலான ஜெப ஆலயங்களுடன் இணைந்திருந்த பள்ளிகளுக்கு வருகை தரும்படி யூதப் பையன்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

**மதத் தலைமைத்துவத்தில் மாற்றம்**

பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட மதத் தலைவர் களாய் இருந்தனர். அவர்களின் ஊழியமானது, தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியினால் துணை செய்விக்கப்பட்டது. கிறிஸ்துவின் வாழ்வை நாம் படிக்கையில், ஆசாரியர்களையும் அவர்களின் லேவிய உதவியாளர்களை யும் எதிர்கொள்ளுவோம் (லூக். 10:31, 32). இயேசுவின் ஊழியக் காலத்தில், உண்மையில் யூதத்துவமானது இரண்டு பிரதான ஆசாரியர்களைக் கொண்டிருந்தது என்பது விசேஷித்த வகையில் தனிக் கவனத்திற்குரியதாக உள்ளது (லூக். 3:2ஐக் காணவும்). பிரதான ஆசாரியராயிருந்த அன்னா, ரோம ஆளுநரால் பிரதான ஆசாரியத்துவப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருந் தார், ஆனால் இவர் தமது மருமகனான காய்பா என்பவரை (யோவா. 18:13) அந்தப் பணியில் நியமிக்கும்படி செய்வதற்குப் போதுமான செல்வாக்கைப் பெற்றிருந்தார் (மத். 26:3, 57; யோவா. 11:49; 18:24). பெரும்பாலான யூதர்களின் கண்களுக்கு, அன்னாவே உண்மையான பிரதான ஆசாரியராக நிலைத்திருந்ததாகத் தோன்றியது (அப். 4:6ஐக் காணவும்).

ஆசாரியர்களுடன் கூடுதலாக புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிற தலைமைத்துவங்களும் எழும்பியிருந்தன. முதலாவது, ரபீக்கள் (மத். 23:7, 8)[36] எனப்படுபவர்கள் இருந்தார்கள், இவர்கள் ஜெப ஆலயங்களிலும் ஜெப ஆலயப் பள்ளிகளிலும் போதகர்களாக இருந்தார்கள். ரபீக்கள் மத அதிகாரிகள் என்ற வகையில் பெருமளவுக்கு ஆசாரியர்களுக்குப் பதிலாக இடம் பெற்றிருந்தார்கள். சிலரைப் பொறுத்தமட்டில், நியாயப்பிரமாணத் தைப் பற்றிய ரபீத்துவ விளக்கமானது நியாயப்பிரமாணத்தைப் போன்றே கனமுள்ளதாக இருந்தது.[37]

அடுத்ததாக, முன்பு குறிப்பிடப்பட்ட வேத பாரகர்கள் இருந்தனர் (மத். 2:4; 5:20; 7:29; 9:3). "வேதபாரகர்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "எழுதுபவர்" என்ற நேரடி அர்த்தம் தருவதாக உள்ளது. தொடக்கத்தில் வேதபாரகர்கள் முக்கியமான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் பொறுப்புடையவர்களாக இருந்தார்கள்.[38] புதிய

ஏற்பாட்டுக் காலங்களில், இவர்கள் பழைய ஏற்பாட்டின் பிரதிகளை ஏற்படுத்தும் பொறுப்புடையவர்களாக இருந்தனர். இவர்கள் நியாயப் பிரமாணத்தின் அதிகாரிகள் என்று அறியப்பட்டிருந்தார்கள், மற்றும் சிலவேளைகளில் "நியாயசாஸ்திரிகள்" (லூக். 7:30; 11:45, 46, 52)[39] என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் குடிமைச் சட்டங்களில் விற்பன்னர்களாயிருந்தது இல்லை, ஆனால் மதரீதியான சட்டங்களில் விற்பன்னர்களாய் இருந்தார்கள். வேதபாரகர்களில் பெரும்பாலானவர்கள் பரிசேயர்களாக இருந்தனர் (அடுத்து வருகின்ற "பரிசேயர்கள்" என்ற கலந்துரையாடலைக் காணவும்).

இத்துடன் சனதெரீன் சங்கமும் இருந்தது. சனதெரீன் சங்கம் யூதர்களின் ''உயர்நீதிமன்றமாக'' இருந்தது. ''சனதெரீன்'' என்பது KJVயிலும் NASBயிலும் "ஆலோசனைச் சங்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது (மத். 26:59; மாற். 15:43; லூக். 22:66) ஆனால் இது NIVயில் "சனதெரீன்" என்றே தரவழைக்கப் பட்டுள்ளது. சனதெரீன் சங்கமானது யூத நாட்டின் உள் விவகாரங்களை முறைப்படுத்துவதற்கான அமைப்பாக கி.மு. சுமார் 200ம் ஆண்டுவாக்கில் முதன்முறையாகத் தோன்றியது. பாரம்பரியத்தின்படி சனதெரீனில் எழுபது உறுப்பினர்களும் - அத்துடன் தலைவராகச் செயல்பட்ட பிரதான ஆசாரியரும் இருந்தார்கள். இதில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சதுசேயர்களாய் இருந்தார்கள் ("சதுசேயர்கள்" என்ற கலந்துரையாடலின் கீழ் காணவும்), ஆனால் வல்லமை நிறைந்த பரிசேயச் சிறுபான்மையினரும் அதில் இருந்தார்கள் ("பிற பிரிவுகள்" என்ற கலந்துரையாடலில் காணவும்).

மேலே குறிப்பிடப்பட்ட செல்வாக்குடைய எல்லா யூதர்களுக்கும் தங்கள் தகுதி நிலையையும், அதிகாரத்தின் பதவிகளையும் காத்துக் கொள்ளுதல் என்பது முக்கியமானதாக இருந்தது. இவ்விதமாக இவர்கள் இயேசுவின் மாபெரும் பகைஞர்கள் ஆனார்கள்.

## குழுக்கள் எழும்புதல்

இயேசுவின் நாட்களில் இருந்த யூதத்துவப் பிரிவுகள் பற்றிய பாடம் ஒரு தனிப்பகுதியாகப் படிப்பதற்குத் தகுதி வாய்ந்ததாக உள்ளது. இந்தப் பிரிவினர்களில் பெரும்பான்மையானோர் மதத்தினால் தூண்டுதல் பெற்றது போலவே அரசியலினாலும் கலாச்சாரத்தினாலும் தூண்டுதல் பெற்றார்கள்.

### பரிசேயர்கள்

"பரிசேயர்" என்பது "தனிப்படுத்த" என்று அர்த்தம் தருகிற எபிரெய வினைச் சொல்லின் வடிவமாகும். இந்தப் பிரிவானது, யூதர்கள் கிரேக்கக் கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி செலூக்கியர்களால் வற்புறுத்தப் பட்ட வேளையில் தொடங்கியிருக்கும் என்று சிலர் நினைக்கின்றார்கள். தொடக்கத்தில் பரிசேயர்கள் மத வழிபாட்டுடன் தேசபக்தியையும் ஒன்று கலந்தார்கள். இயேசுவின் நாட்களில், இவர்கள் சுயநீதி மற்றும் மரபு சார்ந்த தன்மை ஆகியவை கொண்ட ஒரு பிரிவாக சீர்கேடு அடைந்தார்கள் (மத்.

*23:1-36). இவர்கள் எண்ணிக்கையில் கொஞ்சமாக இருந்தார்கள், ஆனால் மக்களிடம் பிரபலமாகி இருந்தார்கள், இவ்விதமாக இவர்கள் கணிசமான செல்வாக்குக் கொண்டிருந்தார்கள். எல்லா நடைமுறை நோக்கங்களுக்கும், இவர்கள் ஏவுதல் பெற்றிராத "முன்னோர்களின் பாரம்பரியம்" (மாற். 7:3) நியாயப்பிரமாணத்தைப் போலவே கட்டுவிப்பதாக ஆழ்ந்து சிந்தித்தார்கள். இந்தப் பாரம்பரியங்களை இயேசு மதிக்காதிருந்தபோது (மத். 15:1-14), பரிசேயர்கள் அவருக்குக் கசப்புமிக்க விரோதிகளானார்கள்.*

***சதுசேயர்கள்***

*"சதுசேயர்" என்ற பெயரானது, சாலொமோனின் கீழ் முதலாவது பிரதான ஆசாரியத்துவ வழியில் வந்த சாதோக் என்ற நபரின் பெயரிலிருந்து தரவழைக்கப்பட்டதாக இருக்கலாம் (1 இரா. 1:32, 34, 38, 45; மேலும் எசே. 40:46; 44:15 ஆகியவற்றைக் காணவும்). மகா ஏரோதின் காலத்திலிருந்தே எருசலேமின் வீழ்ச்சி வரையிலும் பதவிக்கு வந்த ஒவ்வொரு பிரதான ஆசாரியரும் சதுசேயராகவே இருந்தார். இது செல்வம் மிகுந்த. உயர்குடிக் குழுவாக, ஆசாரியர்கள் பலரைக் கொண்ட குழுவாக இருந்தது. பரிசேயர் கள் தோன்றிய காலகட்டத்திலேயே சதுசேயர்களும் தோன்றியதாகச் சிலர் நம்புகின்றார்கள். இவர்கள் கிரேக்க வழிமுறைகளை ஏற்றுக்கொண்டார் கள். அதிகாரத்தில் யார் இருந்தாலும் அவர்களுடன் ஒத்துப் போகும் இவர்களின் மனவிருப்பத்தின் காரணமாக, இவர்கள் ஒரு அரசியல் பலம் வாய்ந்தவர்கள் ஆயினர். கிரேக்கத் தத்துவத்தை இவர்கள் ஏற்றுக் கொண்டதின் நிமித்தமாக, இவர்கள் உயிர்த்தெழுதலையும் மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்க்கையையும் பற்றிய கருத்துக்களைப் புறக்கணித்தார்கள் (மாற். 12:18; அப். 23:6-8). இவர்களின் அதிகாரத்தை இயேசு அச்சுறுத்தியதன் காரணமாக இவர்கள் அவரை வெறுத்தார்கள்.*

***பிற பிரிவுகள்***

*சுவிசேஷ விவரங்களில் பிற பிரிவுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில், ஏரோதியர்கள் என்ற குழு, எல்லா பலஸ்தீனத்தின் மேலாக அரியணையின்மீது ஒரு ஏரோதை வைப்பதற்கு அர்ப்பணம் செய்திருந்த அரசியல் ரீதியான துடிப்புள்ள ஒரு குழுவாக இருந்தது (மத். 22:16; மாற். 3:6; 12:13; மேலும் மாற். 8:15ஐக் காணவும்).*

*செலாத்தே என்பவர்கள், ரோமர்களைப் பட்டயத்தினால் மேற் கொள்ள வேண்டும் என்று ஒப்புக்கொடுத்திருந்த யூதக் கலகக்காரக் குழுவினராக இருந்தார்கள். இந்தக் குழுவில் இருந்து சீமோன் எனப்பட்ட ஒருவர் அப்போஸ்தலரானார் (மத். 10:4; மாற். 3:18; லூக். 6:15).*

*உலகப்பிரகாரமான வரலாறு ஒன்றிலிருந்து நாம், மதரீதியான இன்னொரு குழுவும் இருந்தது என்று அறிகின்றோம்: இவர்கள் எஸ்ஸென்ஸ் என்று அறியப்பட்டார்கள். இது, சமுதாயத்திலிருந்து தங்களைப் பிரித்து வைத்துக் கொண்ட மத தீவிரவாதிகளின் அமைப்பாக இருந்தது. (இவர்கள் பரிசேயர்கள் குழுவிற்குள்ளாக இருந்தே தோன்றி யிருக்கலாம்.) கும்ரான் சமூகமானது (புகழ்பெற்ற "சவக்கடல் சுருள்களின்"*

ஆதார மூலமாக இருந்த) எஸ்ஸென்ஸுகளுடன் இணைவு கொண்டிருந்த தாகச் சிலர் நினைக்கின்றார்கள். ''எஸ்ஸென்ஸ்'' என்ற பெயரானது வேதாகமத்தில் காணப்படுவதில்லை. யோவான் ஸ்நானன் எஸ்ஸென்ஸாக இருந்திருக்கலாம் அல்லது தமது போதனையையும் நடைமுறையையும் எஸ்ஸென்ஸுகளிடமிருந்து பெற்றிருக்கலாம் என்ற அரைகுறையாய்க் கேள்வியுற்ற உரிமைகோருதலை மறுப்பதற்காக மட்டுமே நான் இந்தக் குழுவைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன். இந்த உரிமைகோருதலை மறுப்பதற்கு உள்ள ஆதாரங்களைப் போல் இதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரம் எதுவும் இருப்பதில்லை.[40]

## மேசியாத்துவ எதிர்பார்ப்புகள்

இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் நான், யூதர்கள் தேவனுடைய மேசியாவுக்காக எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந் தேன். மத்தேயு புத்தகத்தை முன்னிறுத்துதலில், நான் பின்வருமாறு விளக்கப்படுத்தியிருந்தேன்:

> ''மேசியா'' என்பது ''அபிஷேகம் பெற்ற[ஒரு]வர்'' என்று அர்த்தப்படும் ஒரு ஒலிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையாக உள்ளது. "கிறிஸ்து" (யோவா. 1:41) என்பது இதற்குச் சமமான கிரேக்க வார்த்தையாக உள்ளது. ஆசாரியர்கள் ... மற்றும் பிறரின் நியமனத்தில் அபிஷேகம் பயன்படுத்தப்பட்டது; ஆனால் ஒரு யூதர் "தேவனால் அபிஷேகம் பெற்றவர்" என்ற சொற்றொடரைக் கேள்விப்படும்போது, அவர் ஒரு ராஜாவையே நினைத்தார் (1 சாமு. 10:1; 24:6; சங். 2:2, 6ஐக் காணவும்).

இந்தப் பாடத்தின் முன்பகுதியில் நான், கடைசியாக இயேசு வந்த வேளையில், மேசியாவின் வருகை பற்றிய எதிர்பார்ப்பு மிகவும் உச்சகட்டத்தில் இருந்தது என்றும் குறிப்பிட்டிருந்தேன். இது தேவாலயத் தில் குழந்தை இயேசுவை வரவேற்ற சிமியோன் மற்றும் அன்னாள் ஆகியோரின் உணர்வெழுச்சியில் காணப்பட முடியும் (லூக். 2:25-38). சிமியோன், ''கர்த்தருடைய கிறிஸ்துவுக்காக'' எதிர்நோக்கிக் காத்து இருந்தார் (லூக். 2:26). அன்னாள், ''எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும்" [அவரைக்] இயேசுவைக் குறித்துப் பேசினாள் (லூக். 2:38). யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தைத் துவங்கினவுடனே, ''யோவானைக் குறித்து: இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்க ளெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாய் இருந்தார்கள்'' (லூக். 3:15). சமாரியர்கள் கூட ''மேசியா (என்று அழைக்கப்படுகின்ற கிறிஸ்து) வருவார்" என்று நம்பியிருந்தார்கள் (யோவா. 4:25). அரிமத்தியாவூர் யோசேப்பு என்பவர், "தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவர்'' என்று விவரிக்கப்பட்டார் (லூக். 23:51). பொதுவாக மக்களின் எதிர்பார்ப்பானது, இயேசுவை ராஜாவாக முடிசூட்ட அவர்கள் செய்த முயற்சியிலும் (யோவா. 6:15), எருசலேமுக்குள் [இயேசுவின்]

*வெற்றிப் பிரவேசத்தின்போது இருந்த உணர்வெழுச்சியிலும் (யோவா. 12:13) காண முடியும்.*

*மேசியாவின் வருகையானது கலந்துரையாடலுக்கு ஒரு பிரபலமான பாடக் கருத்தாக இருந்தது என்பது தெளிவு. அவரது வாழ்வின் விவரங்கள் அறியப்பட்டிருந்தன: அவர் தாவீதின் சந்ததியைச் சேர்ந்தவராக இருப்பார் (மத். 22:42); அவர் பெத்லகேமில் பிறப்பார் (மத். 2:5, 6; யோவா. 7:42). மேசியாவைப் பற்றிய கலந்துரையாடலில் அவரது முன்னோடியைப் பற்றிய யூகமும் பிணைக்கப்பட்டிருந்தது (யோவா. 1:21; மத். 16:14 ஆகியவற்றைக் காணவும்). பொய்யான மேசியாக்கள் எழும்பியிருந்தார்கள் என்பது உறுதி, இவர்கள் மக்களின் நம்பிக்கைகளை விசிறி தூண்டி விட்டிருந்தார்கள்.[41]*

*இந்த எல்லா எதிர்பார்ப்புக்களுடனும், யோவானின் வார்த்தையானது புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமானதாக இருந்திருக்கலாம்: “அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை” (யோவா. 1:11). இயேசு யூதர்களால் பொதுவாகவும், யூதத்தலைவர்களால் குறிப்பாகவும் புறக்கணிக்கப்பட்ட விஷயமானது புதிய ஏற்பாட்டின் மிகவும் இன்றியமையாத ஆய்வுக் கருத்தாக உள்ளது (மத். 21:42; மாற். 12:10; லூக். 17:25; அப். 4:11; 1 பேது. 2:4, 7). நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த மேசியா என்று இயேசு ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை?*

*அடிப்படையில், யூதர்கள் மேசியாவைப் பற்றி ஒரு முன் அனுமானக் கருத்தைக் கொண்டிருந்தார்கள், அந்தக் கருத்துக்கு இயேசு பொருந்தி வராதபடியால் அவர் புறக்கணிக்கப்பட்டார். மேசியா என்பவர் தேவனால் அனுப்பப்பட்ட ராஜாவாயிருந்தார் (ஏசா. 9:6, 7) அவர் தாவீதின் ராஜ வம்சத்திலிருந்து தோன்றுவார் (சங். 89:3, 4) என்று பழைய ஏற்பாடு போதித்தது. மேசியா ஒரு பாடுபடும் ஊழியராக இருப்பார் (சங். 22:1-21; ஏசா. 53:1-12) என்றும் பழைய ஏற்பாடு போதித்தது, ஆனால் இந்த இயல்பை உடைய தீர்க்கதரிசனங்கள் பெருமளவுக்குப் புறக்கணிக்கப் பட்டன. ரோமர்களைத் தோற்கடிப்பதற்கும் தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் நாட்களில் இருந்தது போன்று, இஸ்ரவேலின் அரசாட்சியைத் திரும்பக் கட்டி எழுப்புவதற்கும் யூதர்களுக்கு ஒரு பலம் வாய்ந்த அரசியல் மற்றும் இராணுவரீதியான தலைவர் தேவை என்பதே அவர்களின் மனங்களில் இருந்தது என்பது தெளிவு. “என் இராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதல்ல” (யோவா. 18:36அ) என்று கூறிய ஒரு கிறிஸ்து மேற்சொன்ன எதையும் செய்ய மாட்டாரே. இயேசு, மேசியாவுக்காக ஆயத்தமாகியிருந்த தமது மக்களின் முன் அனுமானம் என்ற “சதுரத் துளையில்” பொருந்த முடியாத “வட்ட முளையாக” இருந்தார்.*

## முடிவுரை

*இயேசுவின் நாட்களில் இருந்த - சராசரி யூதக் குடும்பத்தின் அன்றாட வாழ்வு உள்ளிட்ட - மற்ற விவரங்கள் தரப்பட முடியும், ஆனால் அப்படிப் பட்ட விவரங்களுக்கு நாம் சற்றே காத்திருக்க வேண்டும். அவைகள்,*

சுவிசேஷ விவரங்களின் வேத வசனப்பகுதிகளுக்குத் தொடர்புடைய இடம் வருகையில் அறிமுகப்படுத்தப்படும்.

இயேசு வந்த வேளையில் இருந்த உலகம் பற்றிய இந்தப் பாடத்தை, மேசியா என்பவர் "வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போல்" இருப்பார் (ஏசாயா 53:2) என்ற தீர்க்கதரிசனத்தைக் கவனித்தலுடன் நாம் முடிப்போம். அவரது வருகைக்காகத் தேவன் தயாரிப்பைச் செய்திருந்தார் (கலா. 4:5), ஆனால் மக்களின் இருதயங்கள் இன்னமும் வறண்ட விடாய்த்த பூமியைப்போன்றே இருந்தது. இந்த உபசரிப்பற்ற சூழ்நிலையில் கிறிஸ்து வருகிறவராய் இருந்தார். கடைசியில், இயேசுவின் மார்க்கம் வளர்ந்து உலகம் முழுவதிலும் பரவும்.

குறிப்புகள்

[1]மற்ற யூதர்கள் திரும்பி வரவில்லை, ஆனால் அவர்கள் சிதறடிக்கப்பட்ட நாடுகளிலேயே தங்கியிருந்தார்கள். இவர்கள் "சிதறியிருக்கிறவர்கள்" (யோவா. 7:35; மேலும் யாக். 1:1ஐக் காணவும்) என்று அறியப்பட்டார்கள். [2]பழைய ஏற்பாட்டின் கடைசி வேத வசனப்பகுதியானது கி.மு. 430-425வாக்கில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டின் முதல் நிகழ்ச்சிகள் - யோவான் ஸ்நானனின் பிறப்புடன் தொடர்புடையவை - கி.மு. 5வாக்கில் நடைபெற்றன. இது, (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையில்) நானூறுக்கும் சற்று அதிகமான ஆண்டுகள் இடைவெளியை ஏற்படுத்துகிறது. [3]ஸ்மித் அவர்களின் மூன்று சாத்தியக்கூறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தழுவி அமைக்கப்பட்டன (F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* [Eugene, Oreg.: Harvest House Publishers, 1984], 1338-39). [4]இவைகள் பழைய ஏற்பாட்டு "மதநூல்களில்" உள்ளடக்கப்படவில்லை (மதநூல் என்பது [canon] ஏவுதல் பெற்றது என்று கருதப்படுகின்ற பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் தொகுப்பாகும்). [5]இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள் காண்பித்தார்கள், ஆனால் அவர்கள் தள்ளுபடி ஆகமங்களிலிருந்து எதையும் மேற்கோள் காண்பித்ததில்லை. [6]யோஸிப்பஸ் என்பவர் *Against Apion* மற்றும் *Autobiography* என்ற இரு புத்தகங்களையும் எழுதினார், ஆனால் அவை நமக்குக் குறைவான முக்கியத்துவம் உடையவையாக உள்ளன. [7]தீர்க்கதரிசனக் கனவுகளில், ரோமப் பேரரசின் உள்ளார்ந்த இயல்பான பலவீனம் போன்ற மற்ற விவரங்களும் அடங்கியிருந்தன. தேவன் தமது இராஜ்யத்தை எழும்பச் செய்வார் (தானி. 2:44) என்ற வாக்குத்தத்தமே நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக உள்ளது - இது சபை ஸ்தாபிக்கப்பட்ட போது நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தமாக உள்ளது. ஆயினும், இந்தப் பாடத்தில் நாம், முன்னுரைக்கப்பட்ட நான்கு இராஜ்யங்கள் மீதும் கவனம் செலுத்த விரும்புகின்றோம். [8]மேதியர் மற்றும் பெர்சியர் என்பவர்கள் உலகத்தை வெற்றிகொள்ள இணைந்து செயல்பட்ட படைகளாயிருந்தனர், எனவே இது மேதிய-பெர்சிய பேரரசு என்று நினைக்கப்படலாம். இதற்கு மறுபுறத்தில், பெர்சியா என்பது மிகவும் ஆதிக்கமுடையதாக இருந்தது, எனவே இது அடிக்கடி, பெர்சியப் பேரரசு என்று குறிப்பிடப்படுகிறது. இவ்விதமாக நான் இதை எளிமையாக பெர்சிய ஆளுகை என்று மட்டுமே சில வேளைகளில் குறிப்பிடுவேன். [9]மாறுபட்ட அதிகாரிகளால் தரப்பட்டுள்ளபடி வெவ்வேறு காலகட்டங்களின் தேதிகள் ஒரு சில ஆண்டுகள் வித்தியாசமானவைகளாக உள்ளன. தரப்படுகின்ற

*தேதிகளை மிகச் சரியானவை என்று நினைக்காமல், தோராயமானவை என்றே நினையுங்கள். பல்வேறு காலகட்டங்களின் தேதிகள் பலஸ்தீன ஆளுகையுடன் மட்டுமே வரையறுக்கப்படுகின்றன. [10]மகா அலெக்சாந்தர் மெக்கதோனியாவில் இருந்து வந்தவரானதால், இது ''மெக்கதோனியர்களின் காலம்'' என்றும் அறியப்படுகிறது. தானியேல் 8:21 வசனம், ''கிரேக்கு'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, எனவே நாமும் இந்த ஆய்வில் அதே வார்த்தையைப் பயன்படுத்துவோம்.*

*[11]கொய்னீ கிரேக்கம் என்பது இலக்கியத் தரம் வாய்ந்த கிரேக்கத்திற்கு எதிரான மொழியாக, சாதாரண மக்கள் பேசும் கிரேக்க மொழியாக இருந்தது. [12]மகா அலெக்சாந்தருடைய இராஜ்யத்தின் நான்கு பாகமான பிரிவினையானது தானியேல் 8:8, 21, 22ல் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. [13]"தாலமிகள்" என்ற பெயர், எகிப்தின் மீது ஆதிக்கம் செலுத்திய தாலமி என்ற படைத் தளபதியின் பெயரில் இருந்து தரவழைக்கப்பட்டது. [14]"செலூக்கியர்கள்" என்ற பெயர் சீரியாவின் மீது ஆதிக்கம் செலுத்திய செலூக்கஸ் என்ற படைத்தளபதியின் பெயரில் இருந்து தரவழைக்கப்பட்டது. [15]''கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தில் காணவும். [16]ஸ்மித், 1346. தானியேலின் புத்தகத்தில் உள்ள பல தீர்க்கதரிசனங்கள் அந்தியோகஸ் எபிபெனஸ் என்ற சர்வாதிகாரியின் ஆளுகையை எடுத்துரைப்பதாகப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது (எடுத்துக்காட்டாக, தானி. 8:9-11). [17]பன்றி என்ற விலங்கானது யூதர்களுக்கு அசுத்தமான விலங்காக இருந்தது (லேவி. 11:3, 7). [18]இது அஸ்மோனியர் (அல்லது ஹஸ்மோனியர்) காலம் என்றும் அறியப் படுகிறது. [19]பிரதான ஆசாரியர் ஆரோனின் வம்சவழியில் வந்தவராக, வழக்கமாக[தம் பெற்றோருக்கு மூத்த மகனாக]வே இருக்க வேண்டும் என்று மோசே கட்டளை யிட்டு இருந்தார் (யாத். 29:9; எண். 25:10-13 ஆகியவற்றைக் காணவும்). மோசேயின் அறிவுறுத்தல்கள் மறக்கப்பட்டன அல்லது புறக்கணிக்கப்பட்டன என்பது உறுதி. [20]ஒவ்வொரு தேதியைப்பற்றிய விஷயம் இது போன்றே இருப்பதால், நமது அக்கறை பலஸ்தீன நாட்டைப் பற்றியதாகவே உள்ளது. கி.பி. 70ல் ரோமாபுரியார் எருசலேமை அழித்தார்கள்.*


*[21]அந்த வேளையில், ரோமாபுரியானது பாம்ப்பே மற்றும் யூலியு இராயன் உள்ளிட்ட ஒரு மூவரசர் தொகுதியால் ஆளப்பட்டிருந்தது. கடைசியில் யூலியூ இராயன் கட்டுப்படுத்துதலை எடுத்துக் கொண்டான். [22]''கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தை காணவும். [23]"பாசான்" என்பது பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (யோசு. 22:7; 1 நாளா. 6:71; ஏசா. 33:9), ஆனால் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் படுவது இல்லை. இத்துரேயா மற்றும் திரேகொனித்தி நாடுகளைச் சுற்றிலுமிருந்த பகுதியானது பாசான் என்ற பழைய நாட்டிற்கு இணையானதாயிருந்தது, எனவே இந்தப் பகுதியானது வரைபடங்களில் அடிக்கடி ''பாசான் மாவட்டம்'' என்று குறிப்பிடப்படுகிறது. [24]"கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தில் காணவும். [25]இராயனின் உருவத்துடன் இருந்த நாணயங்கள் சுற்றுக்கு விடப்பட்டிருந்தன (மத். 22:20), ஆனால் யூதர்கள் ரோமாபுரியாருக்குத் தங்கள் வரியைச் செலுத்துவது என்ற செயலைத் தவிர்த்து, மற்ற பரிவர்த்தனைகளுக்கு "சபிக்கப்பட்ட நாணயங் களை" கையாள வேண்டியிருந்தது இல்லை. [26]"பலஸ்தீனம்" என்ற பெயர் பெலிஸ்தர்கள் என்பதிலிருந்து தரவழைக்கப் பட்டது. பெலிஸ்தர்கள் கானான் நாட்டின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்திருந்தார்கள் (செப். 2:5ஐக் காணவும்). மக்காபேயர்கள் பெலிஸ்தர்களுக்கு எதிராக யுத்தம் செய்தார்கள், ஆனால் புதிய ஏற்பாட்டில் பெலிஸ்தர்கள் [தங்கள்] பெயரினால் குறிப்பிடப்படுவதில்லை. அவர்கள் யூத இனத்திற்குள் ஒன்றாக்கப் பட்டதாகச் சிலர் நினைக்கின்றார்கள். [27]"பலஸ்தீனம்"*

என்ற பெயரானது KJV பழைய ஏற்பாட்டில் ஒருமுறை காணப்படுகிறது - யோவேல் 3:4. இந்த வார்த்தை NASB வேதாகமத்தில் ''பிலிஸ்தியா'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [28]John D. Davis, "Palestine," *A Dictionary of the Bible*, 4th ed. (Grand Rapids, Mich.: Baker Book House, 1956), 562. [29]பலஸ்தீனத்தின் அளவை நீங்கள் வாழ்கின்ற பகுதிகளின் அளவுடன் ஒப்பிடவும். இது பலஸ்தீனத்தின் ஒப்பீட்டு அளவான சிறிய அளவை உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ள உதவும். அது ஃபிஜீ, குவைத் அல்லது சுவிட்ஜர்லேன்டு ஆகிய நாடுகளை விடச் சற்றே பெரியதாகவும், பெல்லிசீ, எல் சல்வெடார் அல்லது ஸ்லோவேனியா நாடுகளை விடச் சற்றே சிறியதாகவும் இருந்தது. [30]இந்தப் பாடத்தில் ''பாசாஜே''ப் பற்றி முன்பு குறிப்பிட்ட குறிப்பு எண்ணை மறுகண்ணோட்டமிடவும்.

[31]இந்தப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட நகரங்கள் இருந்தன, ஆனால் அவற்றில் பத்து மட்டுமே மிகவும் இன்றியமையாதவைகளாகக் கருதப்பட்டன. [32]தேவாலயம் கி.பி. 60களில் வரையிலும், அதாவது கி.பி. 70ல் ரோமர்களால் அழிக்கப்படுவதற்குச் சற்றுக் காலம் முன்பு வரையிலும் பணி முடிக்கப்படாதிருந்தது. அந்தக் காலம் வரையில் கூட கட்டுமானப் பணி முடிவடையவில்லை என்று சிலர் நினைக்கின்றார்கள். [33]இந்தப் புத்தகத்தில் உள்ள "யூதர்களின் பண்டிகைகள்" என்ற வரைவட்ட வணையைக் காணவும். எக்காளங்களின் பண்டிகை மற்றும் பூரிம் பண்டிகை ஆகியவற்றைத் தவிர மற்ற பண்டிகைகள் யாவையும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பண்டிகைகள் பற்றி பிற்பாடு, இவைகள் வேத வசனங்களில் அறிமுகப்படுத்தப்படும் வேளையில் கலந்துரையாடப்படும். [34]"ஜெப ஆலயம்" என்ற வார்த்தையானது உண்மையில் மக்கள் கூடிவரும் இடத்திற்கு மாறாக மக்களையே குறிப்பிட்டது. (''ஜெப ஆலயம்'' என்ற வார்த்தை யின் அடிப்படை அர்த்தம் பற்றிய கருத்தை, இந்தப் புத்தகத்தில் உள்ள "மத்தேயு எழுதிய சுவிசேஷம்'' என்ற பாடத்தின் முடிவில் வரும் குறிப்பு எண். 22க் காணவும்.) இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையானது மக்கள் கூடிவந்த கட்டிடத்தைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (லூக். 7:5). [35]ஜெப ஆலயங்கள் பற்றியும் அவற்றின் நிறுவன அமைப்பு மற்றும் ஆராதனைகள் பற்றியும் தொடர்ந்து வரும் புத்தகங்களில் நாம் அதிகமாய்க் கூறுவோம். எடுத்துக்காட்டாக, அவற்றின் தலைவர்கள் "மூப்பர்கள்" என்று அறியப் பட்டனர். சில வேளைகளில் சுவிசேஷ விவரங்களில் "மூப்பர்கள்" என்ற வார்த்தை ஜெப ஆலயத் தலைவர்களைக் குறிப்பிடவும் (லூக். 7:3-5), மற்றும் சில வேளைகளில் மதத்தின் மற்ற அதிகாரிகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. [36]''ரபீ'' என்ற எபிரெய வார்த்தை ''எனது எஜமானர்'' என்று அர்த்தப்படுகிறது. இது, "எனது போதகர்" என்றும் அர்த்தப்பட முடியும் (யோவா. 20:16ஐக் காணவும்; ''ரபோனீ'' என்பது ''ரபீ'' என்பதன் மாறுபாடாக உள்ளது). இயேசு, மரியாதையின் அடையாளமாகத் தமது சீஷர்களால் ''ரபீ'' என்று அழைக்கப்பட்டார் (மத். 26:25; மாற். 9:5; யோவா. 3:2). [37]இந்த விளக்கங்கள் கடைசியாக "The Talmud" என்று அறியப்பட்ட ஒரு தொகுப்பாகச் சேர்க்கப்பட்டன. [38]2 சாமுவேல் 8:17ஐக் காணவும் (NASBயில் "secretary" [தமிழில் இது "சம்பிரதி" என்றுள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, ''வேத பாரகர்'' என்பதற்கான வார்த்தையாக உள்ளது; KJVஐக் காணவும்). [39]நியாயப்பிரமாணப் போதகர்களைக் குறிப்பிடுவதற்கு, KJV அவ்வப்போது "doctor" என்ற வார்த்தையையும் பயன்படுத்துகிறது (லூக். 2:46; 5:17). [40]யோவான் தேவனிடத்திலிருந்து தேவனுடைய செய்தியுடன் அனுப்பப் பட்டார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (யோவா. 1:6; லூக். 3:2). மற்றும், எஸ்ஸென்ஸ¬களின் போதனைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை யோவானின் போதனைகள்

*மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டால் பல வேறுபாடுகள் வெளியாகின்றன.*

*[41]இயேசு தமது சீஷர்களிடத்தில், இவை யாவும் தாம் சென்ற பின்பு நடைபெறும் என்று கூறினார் (மத். 24:5, 23, 24). கல்வியாளர்களில் பலர், இது அவரது பிறப்புக்கு முன்பும் நடைபெற்றிருந்தன என்று நம்புகின்றார்கள். அப். 5:36, 37 வசனங்கள் பொய் நடிப்புக்காரர்கள் இருவரைப் பற்றிக் கூறலாம்.*




*கிறிஸ்துவின் வாழ்வின் போது பலஸ்தீனம்*

## யூதர்களின் பண்டிகைகள்[1]

| பண்டிகையின் பெயர் | இது எவ்விதம் குறிப்பிடப் பட்டது | ஆசரிக்கப் படும் மாதம் | பரிசுத்த ஆண்டின் மாதம் | குடிமை ஆண்டின் மாதம் | தோராயமான ஆங்கில மாதம் | பண்டிகைக் காலம் | எங்கு ஆசரிக்கப் பட்டது | இதன் ஆசரிப்பின் முக்கிய அம்சம் | இது எதனைக் குறித்தது | பிற பெயர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பஸ்கா | பெரும் பண்டிகை | நிசான் அல்லது ஆபீப் | *1 வது* | *7 வது* | *ஏப்ரல்* | *1 வாரம்* | எருசலேம் | பஸ்கா ஆட்டுக் குட்டியை உண்ணுதல் | மரணம் கடந்து செல்லுதல் மற்றும் எகிப்தில் இருந்து புறப்படுதல் | புளிப்பில்லாத அப்பப் பண்டிகை |
| பெந்தெகொஸ்தே | பெரும் பண்டிகை | சீவான் | *3 வது* | *9 வது* | *ஜூன்* | *1 நாள்* | எருசலேம் | கோதுமையின் முதற் பலன்களை குறிக்கும் வகையில் இரண்டு அப்பங்களை ஒப்புக் கொடுத்தல் | சீனாய் மலையில் நியாயப் பிரமாணம் தரப்பட்டது | வாரங்கள்: முதற்பலன்கள்; கோதுமை அறுப்பு |
| கூடாரங்கள் | பெரும் பண்டிகை | திஸ்ரி அல்லது எத்தானிம் | *7 வது* | *1 வது* | *அக்டோபர்* | *1 வாரம்* | எருசலேம் | கூடாரங்களில் வசித்தல் | வனாந்தரத்தில் வாழ்க்கை | ஒன்றுகூடுதல் |
| எக்காளங்கள் | சிறு பண்டிகை | திஸ்ரி அல்லது எத்தானிம் | *7 வது* | *1 வது* | *அக்டோபர்* | *1 நாள்* | எவ்விடத்திலும் | எக்காளங்கள் ஊதுதல் | புத்தாண்டு நாள் | |
| பிரதிஷ்டை | சிறு பண்டிகை | கிஸ்லேயு | *9 வது* | *3 வது* | *டிசம்பர்* | *8 நாட்கள்* | எவ்விடத்திலும் | மகிழ்தல், பாடுதல், விளக்குகளையும் பந்தங்களையும் ஏற்றுதல் | புறதெய்வ வணக்கத்தாரிடமிருந்து தேவாலயத்தை மீண்டும் கைப்பற்றிக் கொண்டபின் அதை மீண்டும் பிரதிஷ்டை செய்தல் | விளக்குகள் |
| பூரிம் | சிறு பண்டிகை | ஆதார் | *12 வது* | *6 வது* | *மார்ச்சு* | *2 நாட்கள்* | எவ்விடத்திலும் | எஸ்தரின் புத்தகத்தை வாசித்தல் | எஸ்தர் இராஜாத்தி யூதர்களைக் காப்பாற்றுதல் | |

[1]Reprinted from *Training for Service* by Orrin Root © 1964. Revised by Eleanor Daniel © 1983, Standard Publishing. Used by permission.